CNR No.TNMY09005032019

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**

முன்னிலை – **திரு.P. கனிமொழி, B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2024ம் ஆண்டு ஜுன் திங்கள் 24– ம் நாள் திங்கட்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஆனி மாதம் 10–ம் நாள்.

**அசல் வழக்கு எண். 114/2019**

1. ராஜா என்கிற பாஸ்கர ராஜேந்திரன்
2. கவிதா. ..... வாதிகள்

//எதிர்//

1. தமிழக அரசு அதன் மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் மூலமாக
2. வட்டாட்சியர், தரங்கம்பாடி,
3. கோட்டாச்சியர், மயிலாடுதுறை,
4. நூர்ஜஹான்,
5. முரளிதரன். .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 10.08.2018 அன்று மயிலாடுதுறை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. 189/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் நாகப்பட்டினம், மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் O.S.114/2016 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.மனோகரன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் D1, D2, D3 தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், D4 தரப்பில் ஆஜரராகாத நிலையில் D4 நீக்கப்பட்டும், வழக்கறிஞர் திரு.K. பாலமுருகன், அவர்கள் D5 தரப்பில் ஆஜராகியும், இன்று 24.06.2024 என்முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் ஆஜரின்மையால் வழக்கு மற்றும் ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்தைப் பொறுத்து 2, 3 பிரதிவாதிகள் 2வது வாதி பெயரில் வழங்கப்பட்ட குடியிருப்பு பட்டாவினை ரத்து செய்ய கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேணுமாயும், தாவா சொத்தில் 4, 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் எந்த ஒரு இடையூறும், குறுக்கீடுகளும் செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வாதிகளுக்கு வழங்கக்கோரியும் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி அழைத்தும் வருகையில்லை. வாதி தரப்பு எந்தவித பிரதித்துவமும் இல்லை. போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டது. மேலும், இவ்வழக்கானது Special Listஆக போடப்பட்டுள்ளது. வாதி தரப்பில் விசாரணைக்கு போதுமான வாய்ப்புகள் வழங்கியும், விசாரணை செய்யப்படவில்லை. எனவே வாதியின் வருகையின்மையால் இந்த

வழக்கானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 24.06.2024 இந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒம்/– P.கனிமொழி,
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**தரங்கம்பாடி.**

CNR No.TNMY090005032019

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**

முன்னிலை – **திரு.P. கனிமொழி, B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2024ம் ஆண்டு ஜூன் திங்கள் 24– ம் நாள் திங்கட்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஆனி மாதம் 10–ம் நாள்.

**<u>அசல் வழக்கு எண். 114/2019</u>**

1. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, இளையாளூர், மெயின் ரோடு, 1/4A, வடக்குத்தெருவில் வசிக்கும் வேலாயுதம் என்பவரின் மகன் 51 வயதுள்ள ராஜா என்கிற பாஸ்கர ராஜேந்திரன்.
2. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, இளையாளூர், மெயின் ரோடு, 1/4A, வடக்குத்தெருவில் வசிக்கும் ராஜா என்கிற பாஸ்கர ராஜேந்திரன் என்பவரின் மனைவி 43 வயதுள்ள கவிதா.

//எதிர்//

1. நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் டி.மு.இலாக்காவை சேர்ந்த நாகூர் மெயின் ரோடு, மாவட்ட ஆட்சியர் அலுவலம், மாவட்ட ஆட்சியர்.
2. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடி மற்றும் டவுன் வட்டாச்சியர் அலுவலகம், வட்டாச்சியர்.
3. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா மற்றும் டவுன் கச்சேரி சாலை, கோட்டாச்சியர் அலுவலம், கோட்டாச்சியர்.
4. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, அரங்கக்குடி 243 காயிதே மில்லத் தெரு, நூர்மஹால் என்ற முகவரியில் வசிக்கும் முஸ்லீம் சுமார் 60 வயதுடைய குத்புதீன் மனைவி நூர்ஜஹான்.
5. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா மற்றும் டவுன் ரயிலடி காவேரி நகரில் வசித்து வரும் இந்து சுமார் 50 வயதுடைய லேட் நாராயணன் மகன் N. முரளிதரன்.

....பிரதிவாதிகள்

தாவா சொத்தைப் பொறுத்து 2, 3 பிரதிவாதிகள் 2வது வாதி பெயரில் வழங்கப்பட்ட குடியிருப்பு பட்டாவினை ரத்து செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிட வேணுமாயும், தாவா சொத்தில் 4, 5 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் எந்த ஒரு இடையூறும், குறுக்கீடுகளும் செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை வாதிகளுக்கு வழங்கக்கோரியும் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| இவ்வழக்கு தாக்கலான | : | 10.08.2018 |

| | | |
|---|---|---|
| நாள் | | |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கபட்ட நாள் | : | 10.08.2018 ஆம் தேதி மயிலாடுதுறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. 189/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் நாகபட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு 24.10.2019 அன்று மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் O.S. 114/2019 என 24.10.2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. |
| இவ்வழக்கின் வழக்குமூலம் | : | தரங்கம்பாடி தாலுக்கா, இளையாளூரில் உற்பத்தி. |

இவ்வழக்கின் நீதிமன்ற அதிகார வரம்பிற்காகவும், நீதிமன்ற கட்டணத்திற்காகவும் பொருமானம் ரூ.2,000/– என நிர்ணயித்து அதற்கு நீதிமன்றக்கட்டணமாக ரூ. 60/– நீ.ம.க.ச பிரிவு 27(C) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 10.08.2018 அன்று மயிலாடுதுறை, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. 189/2018 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் நாகபட்டினம், மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவின் கீழ் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் O.S.114/2016 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.மனோகரன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் D1, D2, D3 தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், D4 தரப்பில் ஆஜரராகாத நிலையில் D4 நீக்கப்பட்டும், வழக்கறிஞர் திரு.K. பாலமுருகன், அவர்கள் D5 தரப்பில் ஆஜராகியும், இன்று 24.06.2024 என்முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் ஆஜரின்மையால் வழக்கு மற்றும் ஆவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பகரப்படும்

**<u>தீர்ப்பாணை</u>**

வாதியின் ஆஜரின்மையால் இவ்வழக்கனாது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**<u>சொத்துவிபரம்</u>**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், செம்பனார்கோவில் சார்பதிவகத்தை சேர்ந்த தரங்கம்பாடி தாலுக்கா, இளையாளூர் வட்டம்.

புல எண்– 173/1A நத்தம் 0.39–1/4 சென்ட்டுக்கு சமமான 17,113 சதுரடியும் மற்றும் அதனுள் உட்பிரிவு செய்யப்பட் புல எண்231/19, 120 ச,மீ மனையும் அதிலுள்ள கூரை வீடு, மரம், தழை வகையறா உட்பட.

**<u>நான்கெல்லை: –</u>**

பிடாரி குளத்திற்கு தெற்கு,
சந்துக்கு மேற்கு,
தெருவீதித்கு வடக்கு
இராமநாதன் வீடு கொல்லைக்கு கிழக்கு.

இந்த நான்கெல்லைக்குட்பட்ட கூடுதல் 17,113 சதுரடியும் மற்றும் அதில் 2–வது வாதிக்கு 120 ச,மீட்டருக்கு கொடுக்கப்பட்ட குடியிருப்பு பட்டா உட்படவும்.

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2024 ம் ஆண்டு ஜுன் 24ஆம் நாள் இடப்பட்டது.

ஒம்/– P.கனிமொழி,
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**தரங்கம்பாடி.**